மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற அந்த மையங்களை ஆய்வு செய்து அதுபோன்று இருக்குமாயின், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

139—

கலைக் கல்லூரிக்குக் கட்டடம்

***43489—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, அரூரிலுள்ள அரசு கலைக் கல்லூரிக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூரில் அமைந்துள்ள பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிக்கான கட்டடப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அந்த இடம் வனத் துறைக்குச் சொந்தமானது. அரூர் அருகிலுள்ள தண்டேகுப்பம் என்ற கிராமத்தில் வனத் துறைக்குச் சொந்தமான இடத்தைக் கையகப்படுத்தி, அந்த இடத்திலே 46,000 சதுர அடி அளவில் ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாகப்

பொறுப்பேற்ற பின்பு, தமிழகத்தில் அறிவிக்கப்பட்ட 11 கல்லூரிகளில் அந்தக் கல்லூரியும் ஒன்று. அந்தக் கல்லூரி அரசுக் கல்லூரி அல்ல. பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி. அந்தக் கல்லூரிக்கு வனத் துறையிடமிருந்து இடம் பெற வேண்டுமென்று சொன்னால், பொதுவாக அது மிகவும் சிரமமான காரியம். மத்திய வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி வனத் துறையிடமிருந்து அனுமதி பெற்று, அங்கே தற்போது கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. 10-2-2014-ல் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையிடமிருந்து அனுமதி கிடைத்திருக்கிறது. 20-2-2014 அன்று பெரியார் பல்கலைக்கழகத்திற்கு அந்த இடம் ஒப்படைக்கப்பட்டது. 16-12-2012 அன்று ஒரு கோடி ரூபாய் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசால் நிதி வழங்கப்பட்டது. 27-8-2014 அன்று ரூ.4,83,32,000 மாண்புமிகு அம்மா அவர்களால் வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால், 23-9-2014 அன்று அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது அதற்கான கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தரை தளம் முடிந்து இரண்டாம் தளம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது பூச்சு வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கூடிய விரைவில் அந்தக் கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியானது 2011 ஆம் ஆண்டு அரூரில் துவக்கப்பட்டது. மூன்றாண்டுகளுக்கு ஒரு செட் மாணவர்கள் வீதம் இரண்டு செட் மாணவர்கள் பட்டப் படிப்பை முடித்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அரூர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலே தங்கள் கல்லூரிப் படிப்பை முடித்திருக்கிறார்கள். சுமார் 40 ஆண்டுக் காலமாக அரூர் பகுதியில் இருக்கக்கூடிய மாணவர்கள் கல்வி கற்க வேண்டுமென்று சொன்னால், குறிப்பாக, பட்டப் படிப்பு படிக்க வேண்டுமென்று சொன்னால், ஈரோடு,

நாமக்கல், சேலம் ஆகிய மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டிய அவல நிலைமை இருந்தது. அந்த அவல நிலையைப் போக்குகிற வகையில், புதிய கல்லூரிக்கான கட்டடப் பணிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல, உண்மையிலேயே இது ஒரு பெரிய வரலாற்றுச் சாதனை. வனத் துறையிடமிருந்து 3 ஏக்கர் நிலத்தை அரசு கையகப்படுத்தி, அதிலே கட்டடம் கட்டுவது என்பது ஒரு பெரிய அளப்பரிய சாதனை. அங்கிருந்து இன்னும் கூடுதலாக 2 ஏக்கர் நிலம் எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கூடிய விரைவில் அந்தக் கூடுதல் நிலமும் கையகப்படுத்தப்படுமா? அதேபோல, கட்டடமும் கட்டப்படுமா? இந்தக் கல்வியாண்டிலாவது அல்லது அடுத்து வருகின்ற கல்வியாண்டிலாவது கல்லூரி மாணவர்கள் புதிய கட்டடத்தில் படிப்பதற்கு ஏதுவாக கட்டடப் பணிகள் எப்பொழுது முடியும்? புதிய கட்டடம் எப்பொழுது திறக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொல்கிறார்கள். அவருடைய கோரிக்கையை ஏற்று, தருமபுரி மாவட்டம் கல்வியிலே பின்தங்கிய மாவட்டம் என்ற நிலையை உணர்ந்துதான் ஆட்சிக்கு வந்தவுடனேயே முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிதான் அந்த பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி. (மேசையைத் தட்டும் ஒலி). மத்திய வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி வனத் துறைக்குச் சொந்தமான இடத்தைக் கையகப்படுத்துவது மிகவும் சிரமம் என்று நீங்களே சொல்கிறீர்கள். உண்மையிலேயே அரசு விரைந்து செயல்படுகிறது என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக்காட்டு எதையும் சொல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-25

அந்தவகையிலே, மாண்புமிகு அம்மாவின் அரசு விரைந்து செயல்பட்டு, மத்திய வனப் பாதுகாப்புச் சட்டத்தின்படி அனுமதி பெற்றிருக்கிறோம். அப்படி அனுமதி பெறுகிறபோது, அந்தப் பகுதியில் எவ்வளவு மரங்கள் இருக்கின்றன; மரங்களை

2015 ஆகஸ்ட் 26]

வெட்டுவதால் எவ்வளவு பாதிப்பு இருக்கிறது; பொதுவாக 3:1 என்று maintain செய்ய வேண்டும் என்ற சூழ்நிலை. மேலும், அங்கு பழங்குடி மக்கள் இருக்கிறார்களா? அவர்களுக்கு பாதிப்பு இருக்கிறதா? அதை ஈடுகட்ட நாம் எவ்வளவு பணம் கட்ட வேண்டும்? இத்தனை தடைகளையும் தாண்டி, விரைந்து நடவடிக்கை எடுத்து, வனத் துறையிடமிருந்து அந்த இடத்தைப் பெற்று, அந்த இடத்தில் கல்லூரிக்கான கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

அந்த இடம் அந்தக் கல்லூரிக்குப் போதுமானதாக இல்லை. எதிர்காலத்தில் அங்கே விடுதி கட்ட வேண்டும், அடிப்படை வசதிகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அதற்காக அந்தக் கல்லூரிக்கு மீண்டும் இரண்டு ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக பெரியார் பல்கலைக்கழகத்தினர் தற்போது Online மூலம் வனத் துறையிடம் விண்ணப்பித்திருக்கிறார்கள். எப்படி மத்திய வனத் துறையிடமிருந்து அனுமதி பெற்று அங்கு Administrative Block கட்டுவதற்கு நிலம் கையகப்படுத்தினோமோ, அதைப்போல, மாணவ, மாணவியருக்கு Hostel facilities-க்காக கூடுதலாக நிலம் கையகப்படுத்தப்படும்.

தற்போது அங்கு கட்டடப் பணி நடைபெற்று வருகிறது. கட்டடத்தின் முதல் மாடி கட்டப்பட்டுள்ளது. இரண்டாவது மாடி இப்போது கட்டப்பட்டு, பூச்சு வேலை Plastering நடந்துகொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் கவலைப்பட வேண்டாம். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் கூடிய விரைவிலே அந்தக் கல்லூரிக்கான கட்டடம் திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் தமிழகத்தில் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பின்பு 38 கல்லூரிகளைத் தமிழகத்திற்கு வழங்கியிருக்கிறார்கள். இதுவரையில் எந்த அரசும் செய்யாத அளவிற்கு, தமிழகத்தில் மிகப் பெரிய சாதனையாக, 38 கல்லூரிகளைத் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 38 கல்லூரிகளில், இதுவரை 7 கல்லூரிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டடப் பணிகள் எல்லாம் முடிவு பெற்று, மாணவர்களின் பயன்பாட்டிற்கு மாண்புமிகு அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. 27 கல்லூரிகளுக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டு, கட்டடப் பணிகள் நடைபெற்று

வருகின்றன. நான்கே நான்கு கல்லூரிகளுக்கு மட்டும் நிலம் கையகப்படுத்த அரசாணை போடப்பட்டு உள்ளது. அந்த இடம்கூட அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம். அந்த நிலத்தைக் கையகப்படுத்தி, கூடிய விரைவிலே அங்கு கட்டடம் கட்டப்படும். ஆகவே, தமிழகத்தில் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த 38 கல்லூரிகளில் ஒன்றைக்கூட விடாமல் அனைத்திற்கும் கட்டடங்கள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

திரு. ப. டில்லி பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தருமபுரி மாவட்டத்தில் காரியமங்கலத்தில் செயல்பட்டு வருகின்ற மகளிர் அரசுக் கலைக் கல்லூரி இரண்டு ஆண்டுக் காலமாக அங்கே இருக்கக்கூடிய அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. தேர்வு செய்யப்பட்ட இடத்தில் கட்டடம் கட்டுவதற்கான பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. அந்தப் பணிகள் எப்போது தொடங்கப்படும்? அந்த மேல்நிலைப் பள்ளியிலே, 500 கல்லூரி மாணவிகள் மற்றும் அந்தப் பள்ளியிலே படிக்கக்கூடிய ஆயிரம் பள்ளி மாணவிகள் ஆகியோரை சேர்த்து 1,500 மாணவிகள் படிப்பதால், அவர்களுக்கு அசௌகரியமாக உள்ளது. அவர்களுக்குத் தேவையான கட்டமைப்பு, கழிப்பறை வசதி, இப்படிப்பட்ட வசதிகள் குறைவால் சிரமப்படுகிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, காரியமங்கலத்திலே அரசு கலைக் கல்லூரிக்குப் புதிய கட்டடம் எப்போது கட்டப்படும்? அரூர், பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியானது தொடங்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் முடிவடைந்துவிட்டதால், அதை அரசு கலைக் கல்லூரியாகக் அறிவிக்கக்கூடிய தகுதி இருக்கிறது. ஆக, அரூர், பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியை அரசு கலைக் கல்லூரியாக வரும் ஆண்டிலாவது அறிவிப்பாரா என மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

2015 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி என்பது வேறு, அரசு கல்லூரி என்பது வேறு. அரசு கல்லூரி என்று சொன்னால், அரசாங்கமே பணியாளர்களுக்கான சம்பளத்தை முழுமையாக வழங்கும், கட்டடம் வழங்கும், தொடர்ந்து அரசு பாதுகாப்பில் நடக்கும். பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியைத் தொடங்கும்போது, அரசு கட்டடம் கட்டுவதற்கு ஊக்கத் தொகையை அளிக்கிறது. ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு அந்தப் பல்கலைக்கழகமே அதைப் பாராமரித்துக்கொள்ள வேண்டும். ஆகவே, தாங்கள் சொல்வதுபோல் 5 ஆண்டுகள் உறுப்புக் கல்லூரியாகச் செயல்பட்டால், அரசே ஏற்க வேண்டும் என்று விதி கிடையாது. விதியை மாற்றிச் சொல்கிறீர்கள். ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியை ஆரம்பிக்கும்போது, முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஆசிரியர்களுக்கான சம்பளம், பணியாளர்களுக்கான சம்பளம், கட்டடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கீடு, நில ஒதுக்கீடு போன்ற ஆரம்ப கட்டப் பணிகளுக்கு அரசாங்கம் நிதி வழங்கும். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பு அந்தப் பல்கலைக்கழகமே, தன்னுடைய உறுப்புக் கல்லூரி என்பதால், அதைத் தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, அதற்கான முழு செலவையும் ஏற்றுக்கொள்ளும். இதுதான் விதி. ஆகவே, அதை அரசுக் கல்லூரியாக மாற்றுவதற்கு சட்டத்தில் இடம் இல்லை. ஆகவே, அதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப்பட வேண்டாம். தொடர்ந்து பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியாக அந்தக் கல்லூரி செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

காரியமங்கலத்தில் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2013-2014 ஆம் ஆண்டில் ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வழங்கினார்கள். பெண்கள் அதிகமாகப் படிக்க வேண்டும், பெண்கள் கல்வி பயில அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும், பெண்கள் உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு பெண்கள் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டது. தமிழகத்தில் நான்கு கல்லூரிகளுக்குக் கட்டடம் கட்ட கோயில் நிலங்கள்தான் தேர்வு

செய்யப்பட்டு இருக்கின்றன என்று நான் ஏற்கெனவே சொன்னேன். அந்த நான்கு கல்லூரிகளில் ஒன்றுதான் காரியமங்கலத்தில் உள்ள அரசு பெண்கள் கல்லூரி. அதற்கான இடம் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமானது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்களும், நானும் நேரில் சென்று, மாணவ, மாணவியர்களுக்கு பஸ் போக்குவரத்து வசதி இருக்கக்கூடிய இடத்திலே கல்லூரி அமைய வேண்டும் என்பதற்காக ஆய்வு செய்து, அந்த இடம் பார்க்கப்பட்டது தேசிய நெடுஞ்சாலையையொட்டி அந்த இடம் உள்ளது. பொதுவாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், அரசின் விதிப்படி 10 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. ஆனால், அந்த இடத்தில் 6 ஏக்கர் நிலம்தான் இருந்தது. தற்போது பொறியியல் கல்லூரிக்கே 10 ஏக்கர் நிலப் பரப்பளவு போதும் என்ற நிலையில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 5 ஏக்கர் நிலம் இருந்தால் போதும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலே, அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து, 6 கோடி ரூபாய்க்கு மேலாக நிதியை அறநிலையங்கள் துறைக்குச் செலுத்தி, தற்போது அந்த நிலம் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவதற்காகக் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அதற்காக ஒப்பந்தப்புள்ளியும் கோரப்பட்டுள்ளது. கூடிய விரைவில் அந்தப் பணி துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் வைகைச்செல்வன் அவர்கள்.

முனைவர் வைகைச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைகள் ஆயிரம் கட்ட ஆணையிட்ட போதிலும், தடைதாண்டி வந்த நதியே! எங்கள் உள்ளக் கோயிலில் ஏற்றிய தீபத்தின் ஜீவ ஒளியே! மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில், அருப்புக்கோட்டையில் ஓர் அரசு கலைக் கல்லூரி வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் கோரிக்கை வைத்த அடுத்த கணமே, ஓர் அரசு கலைக் கல்லூரியை வழங்கியதோடு மாத்திரம் அல்ல, அங்கு

இளங்கலை, முதுகலை ஆகிய இரண்டு வகுப்புகளையும் வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்கள், அப்போதும், இப்போதும், எப்போதும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியறிதலை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளதன் அடிப்படையில், சுமார் 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் அந்தக் கல்லூரிக்கான புதிய கட்டடம் எழுப்புவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன. அந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அருப்புக்கோட்டைக்கு மட்டும் அல்ல, விருதுநகர் மாவட்டத்தில் 3 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை வழங்கி பெருமை சேர்த்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் 12-6-2015 ஆம் தேதியன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் அந்தக் கல்லூரிக்கான கட்டடம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருப்புக்கோட்டையில் கல்லூரிக்கான கட்டடப் பணி எப்போது முடியும் என்று கேட்டிருக்கிறார். கிட்டத்தட்ட 99 சதவிகிதப் பணிகள் முடிவுற்ற நிலையில், கூடிய விரைவில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களது பொற்கரங்களால் திறந்துவைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கையில் இயங்கிவரும் மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரிக்கும், மகளிர் அரசு கலைக் கல்லூரிக்கும்*

கூடுதலாக ஆய்வுக் கூடங்கள், கட்டடங்கள் மற்றும் auditorium போன்ற வசதிகள் செய்து தரப்படுமா என்று கேட்க விழைகிறேன். மேலும், அங்கு பட்ட மேற்படிப்பு தற்போது ஒரு shift-ல் மட்டுமே நடைபெறுகிறது. இரண்டாவது shift-ம் பட்ட மேற்படிப்பை நடத்தினால் மாணவ, மாணவியர்களுக்கு வசதியாக இருக்கும். எனவே இரண்டு shifts நடத்துவதற்கு வாய்ப்பு இருக்குமா எனத் தங்கள் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிற கல்லூரிக்குக் கூடுதலாக பாடப் பிரிவுகள் வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கூடுதலாக பாடப் பிரிவுகள் வழங்கியதால்தான் தற்போது மாணவர்களின் எண்ணிக்கை அந்தக் கல்லூரியில் உயர்ந்திருக்கிறது. ஆகவே, புதியதாக கட்டடம் கட்டுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வகையில், அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பட்ட மேற்படிப்பை மாலை நேரக் கல்லூரியிலும் (2nd shift) தொடங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். பொதுவாக, 2nd shift-ஐப் பொறுத்தவரையில், அரசின் நேரடிப் பார்வையில் இருக்கக்கூடிய ஆசிரியர்களால் நடத்தப்படுவதில்லை. அதற்கு கௌரவ விரிவுரையாளர்களை நியமித்துதான் பாடங்கள் சொல்லிக்கொடுத்து வருகிறோம். பட்ட மேற்படிப்பினை கௌரவ விரிவுரையாளரை நியமித்து நடத்துவதில் சிரமம் இருக்கும். எனவே, கௌரவ விரிவுரையாளருக்குப் பதிலாக, உரிய முறையில் ஆசிரியர்களை நியமிப்பது குறித்து அரசு சிந்தித்து முடிவெடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.